**தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 229 – சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி சட்டமா அதிபர் அவர்களிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலானகணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,277.44 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 943.98 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 333.46 மில்லியன் அல்லது 26.10 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 671.14 | 657.42 | 13.72 | 2.04 |
| மூலதனம் | 606.30 | 286.56 | 319.74 | 52.74 |
| மொத்தம் | **1,277.44** | **943.98** | **333.46** | **26.10** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 20.03.02.11 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 40.00 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 38.52 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 96.30 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.03.02.11 | 40.00 | 38.52 | 1.48 | 3.70 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தஎல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 23.00 | 21.96 | 12.00 | 15.69 | 80.00 | 47.88 |

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் பதிவேடு நாளதவரையாக பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

**3.2 வருமானக் கணக்கு**

திணைக்களத் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 20.03.02.11 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டைத் தயாரித்து, கணக்குகளில் பதிவுசெய்து, கணக்குகளை சமர்ப்பிக்கும் கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த வருமானக் குறியீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக திருத்தியமைக்கப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 40 மில்லியனாக காணப்பட்ட போதிலும், அது ரூபா 35.3 மில்லியன் என வருமானக் கணக்கின் டீஏஎஸ்ஏ – வருடானம் - 1 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் படி, நிலுவையான வருமானம் ரூபா 208,772,615 ஆன போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் படி 2015 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் 183 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 200,828,879 ஆக காணப்பட்டது. அதன்படி, பதிவுசெய்யப்பட்ட நிலுவை வருமானம், கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலுவை வருமானத்தைக் காட்டிலும் ரூபா 7,943,736 ஆல் குறைவாகக் காணப்பட்டது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 128(2)(உ) பிரகாரம், அரசாங்க வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசாங்கத்திற்கு வருமதியாகவுள்ள நிலுவை வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்காக விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 183 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள பட்டியலிடப்பட்ட நிலுவை வருமானம் ரூபா 200,828,879 ஆக இருந்தது. அதன் காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| வருமானம் நிலுவையாக காணப்பட்ட காலப்பகுதி | வருமானம் பெறப்பட வேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கை | நிலுவை வருமானம் |
|---|---|---|
| | | ரூபா |
| ஆண்டு 1 இற்கு குறைந்தவை | 79 | 23,770,699 |
| 1 இற்கு மேல் 3 ஆண்டுகள் வரை | 119 | 79,946,551 |
| 4 முதல் 6 ஆண்டுகள் வரை | 125 | 55,496,040 |
| 7 முதல் 9 ஆண்டுகள் வரை | 32 | 27,601,999 |
| 10 ஆண்டுகளிற்கு மேல் | 33 | 14,013,590 |
| மொத்தம் | | 200,828,879 |

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் படி, மீளாய்வாண்டில் ரூபா 38,520,245 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அக் கணக்கின் படி மீளாய்வாண்டில் ரூபா 62,827,220 வருமானம் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 27,322,315 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்டிருந்த வருமானத்தில் ரூபா 35,504,905 நிலுவையாக காணப்பட்டது. திணைக்களத்தின் வருமானத்தை பட்டியல்படுத்துகின்ற கணக்குகள் பிரிவிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் ரூபா 23,770,699 என வெளிப்படுத்தப்பட்டிருந்தமையால் வருமானக் கணக்கில் அறிவிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானம் ரூபா 11,734,206 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(உ) வருமாக் குறியீட்டிற்குரிய வருமானத்தைத மதிப்பிடுதல், சேகரித்தல் மற்றும் திருத்தியமைத்தல் தொடர்பில் உத்தியோகத்தர்களிடையே அதிகார ஒப்படைத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சட்டச் சேவையொன்று முடிவடைந்த பின்னர் சட்டக் கட்டணத்தை பட்டியலிடுதல் திணைக்களத்தின் கணக்குகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக முன்கூட்டி இலக்கமிடப்பட்ட பட்டியல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) வழங்கப்படுகின்ற பட்டியல்களில் திணைக்களத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பமிடப்படாதிருந்ததுடன், கணக்குகள் பிரிவின் முகாமைத்துவ உதவியாளர் பதவியிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் கையொப்பமிட்டிருந்தார்.

(ஏ) சட்டக் கட்டணங்களை பெற்றுக்கொள்தல், வங்கியில் வைப்பிலிடுதல் என்பன திணைக்களத்தின் கணக்குகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், பட்டியலின் பிரதியொன்று கணக்குகள் பிரிவிற்கு கிடைக்கப்பெறாமை காரணமாக பட்டியலிடப்படுகின்ற அனைத்துப் பணமும் கிடைத்ததா என்பதனை கணக்ககள் பிரிவினால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

(ஐ) காசோலைகளை சட்டமா அதிபரின் பெயரில் வழங்குமாறு பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், காசோலை எழுதப்பட வேண்டிய வங்கிக் கணக்கின் பெயர் மற்றும் கணக்கு இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) தபால் மூலமாக அல்லது கையில் எடுத்துவரப்படுகின்ற காசோலைகள், பணம், காசுக் கட்டளைகள் ஆகியன கருமபீடத்தில் கையளிக்கப்படாது வேறுவிதத்தில் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அவற்றின் பெறுமதிகளை காசோலை மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டில் (பீ ஏ எம் 83 படிவம்) உடனடியாக பதிவுசெய்து உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) அரசாங்க வருமானத்தின் ஒரு பகுதியாக அல்லது தனக்குக் கிடைக்கின்ற முழுத் தொகையினையும் நாளாந்தம் அல்லது முடியுமானளவு விரைவாக வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், கணக்குகள் பிரிவிற்குக் கிடைக்கின்ற காசோலைகள் 06 நாட்கள் முதல் 19 நாட்கள் வரையிலான காலவீச்சில் தாமதிக்கப்பட்டு வங்கியில் வைப்புச்செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டது.

(ஃ) நிதிப்பிரமாணம் 185 இன் பிரகாரம், பணத்தை கையேற்கும் உத்தியோகத்தருக்குக் கிடைக்கப்பெறுகின்ற சகல தொகைகளும் காசுப் புத்தகத்திலும் ஏனைய புத்தகங்களிலும் உரியவாறு பதிவுசெய்யப்பட்டு காசுப் புத்தகத்தின் பெறுவனவுப் பக்கத்திலுள்ள பதிவுகள் ஏனைய புத்தகங்களிலுள்ள செலவுப் பதிவுகளுடன் அவ்வப்போது ஒப்புநோக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற காசோலைகள் பிரதான காசுப் புத்தகத்திலும் கடன்பட்டோர் கணக்குகளிலும் பதிவுசெய்யப்படுதல் முறையே கணக்குகள் பிரிவு மற்றும் கூட்டுத்தாபன பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பிரதான காசுப்புத்தகத்திலுள்ள பெறுவனவுப் பதிவுகளுடன் கடன்பட்டோர் கணக்குகள் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(க) காசுப் புத்தகத்தில் தொகையொன்று கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள திகதி காசு கிடைத்த திகதியாக காணப்பட வேண்டிய போதிலும், காசுப் புத்தகத்தில் காசோலை கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குப் பதிலாக கூட்டுத்தாபன பகுதிக்கு காசோலை கிடைத்திருந்த திகதி கடன்பட்டோரிடமிருந்து பணம் பெறப்பட்ட திகதியாக கூட்டுத்தாபன பிரிவினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஏதேனுமொரு மாதத்தில் கடன் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் அந்த மாதத்திலேயே காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

22901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 753,690 கூட்டுத்தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவையான மீதிகள் 01 ஆண்டு முதல் 13 ஆண்டுகள் வரையான காலத்திலிருந்து நிலவி வந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்திற்கான 2016 ஆம் ஆண்டிற்குரிய தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,277.44 மில்லியன் ஆகவும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 922 ஆகவும் காணப்பட்டது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 738.2 மில்லியன் ஆகக் காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பதவியணி இணைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | முடிவுறுத்தப்பட்ட திகதி | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | |
| திணைக்கள புதிய கட்டிட நிர்மாணம் | 1,182 | 2015.12.08 | 2017.12.31 | 258 | கொள்வனவுக் குழு மாற்றப்பட்டமை காரணமாக ஏற்பட்டிருந்த தாமதத்தினால் ஒப்பந்தம் தாமதித்து கையளிக்கப்பட்டிருந்தமை. முதலாம் கட்டமாகிய கொங்ரீட் செய்தல் ஒப்பந்தம் கையளிக்கப்படுதலில் தாமதம் மற்றும் கட்டிட நிர்மாண கொள்வனவு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதம் |
| வவுனியா, மன்னார், குருநாகல் மற்றும் கண்டி உயர் நீதியரசர் விடுதிகளை நிர்மாணித்தல் | 106 | 2015.06.15 | 2017.12.31 | 28 | முன்னைய ஆண்டில் ரூபா 223,417 செலவிடப்பட்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்த கண்டி விடுதி நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமை. குருநாகல் விடுதியின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை. |

நிர்மாண வேலைகளை இராணுவத்தினரைக் கொண்டு மேற்கொள்கையில் செலவினம் சரியாக மதிப்பிடப்பட்டிருக்காமை

**3.6 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் படி, திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பான நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| பிரிவு | 2016 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | வேலைகள் பூரணப்படுத்தப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைகள் பூரணப்படுத்தப்படாத கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிவில் பிரிவு | 2933 | 301 | 333 |
| குற்றப் பிரிவு | 4814 | 4274 | 13110 |
| கூட்டுத்தாபன பிரிவு | 2202 | 1750 | 5986 |
| பொதுமக்கள் முறைப்பாடுகள் பிரிவு | 690 | 258 | சமர்ப்பிக்கப்படவில்லை |
| பெண்கள் மற்றும் சிறுவர் குற்றங்கள் வழக்குப் பிரிவு | 3651 | 2354 | சமர்ப்பிக்கப்படவில்லை |
| அரசாங்க சட்டத்தரணிகள் பிரிவு | 219 | 2473 | சமர்ப்பிக்கப்படவில்லை |
| உயர் நீதிமன்றப் பிரிவு | 493 | 138 | 355 |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 271 | 200 | 71 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 13 | 10 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 191 | 122 | 69 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 255 | 223 | 32 | - |
| (v) | ஏனையோர் | | | | |
| | • ஒப்பந்த அடிப்படை | 192 | 29 | 163 | - |
| | • ஆட்சேர்க்கப்பட்ட அடிப்படையினை இனங்காண முடியவில்லை | - | 72 | - | 72 |
| | மொத்தம் | 922 | 656 | 338 | 72 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டுத்தாபன பிரிவு, பொதுமக்கள் முறைப்பாட்டு பிரிவு மற்றும் தொடுக்கப்படாத வழக்குகள் பிரிவில் சேவையாற்றுகின்ற ஆட்சேர்க்கப்பட்ட அடிப்படையினை இனங்காண முடியாதுள்ள 72 பதவியணியிர் எண்ணிக்கை தொடர்பில் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.